இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் கட்டடம் கட்டி மாற்றும் முயற்சியை, நம்முடைய நிதிநிலைமைக்கேற்ப, படிப்படியாக அரசு மேற்கொள்ளும்.

மாநிலக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகள்

*108 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975–76 முதல் சென்னை மாநிலக் கல்லூரியில் எந்தெந்த பட்ட மேற்படிப்பு பாடங்களில் மாலைநேர வகுப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, செயற்குறிப்பு எதுவும் இல்லை.

கும்பகோணம் கலைக் கல்லூரி

*109 வினா—திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியில் 1975–76 ஆம் ஆண்டு முதல் Chemistry M. Sc., வகுப்புகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. செ. அரங்கநாயகம்: எம்.எஸ்ஸி. வகுப்பு தொடங்குவதற்கு கட்டடங்களெல்லாம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் ஏன் மேல் பட்டப்படிப்பைத் தொடங்க அரசு தயங்குகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மேல் பட்டப்படிப்பைக் கொண்டுவரும் தன்மையில் அது எந்தெந்தத் துறைக்குத் தேவையோ அந்தத் துறையை எந்தெந்த இடங்களில் அதற்கான வசதி வாய்ப்புகள் செய்ய முடியுமோ அந்த அளவுக்குதான் செய்ய முன்வர இயலும். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் ஐந்து இடங்களில்தான்

1975 அக்டோபர் 29]

மேல் பட்டப் படிப்பு துவங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த வகையில், எம்.ஏ. (எக்கனுமிக்ஸ்), எம்.ஏ. (ஹிஸ்டரி), எம்.காம். வகுப்புகள் ஐந்து கல்லூரிகளில்தான் தொடங்க வசதி வாய்ப்புகள் செய்யப்பட்டன. எம்.எஸ்ஸி. (கெமிஸ்ட்ரி) போன்றவற்றுக்கு விரிவான வகையில் ஆய்வுக்கூட வசதிகள் செய்யப்படவேண்டும். கும்பகோணத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள சூழ்நிலையை ஆராய வேண்டும். பொதுவாக கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ், போன்றவற்றுக்கு போதுமான அளவுக்கு ஆங்காங்கு இடங்கள் இருப்பதைப் பொறுத்தும், பெரும் செலவு ஆகும் என்ற காரணத்தை வைத்தும், தேவையை ஒட்டித்தான் முடிவு செய்யவேண்டியிருக்கும். இந்த ஆண்டு ஐந்து கல்லூரிகளுக்குதான் அனுமதி அளிக்கப்பட்டது.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, எம்.எஸ்ஸி. (கெமிஸ்ட்ரி) அங்கே ஆரம்பிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு முடிக்கப்பட்ட நிலையில் அந்தத் திட்டம் ஏன் தள்ளிவைக்கப் பட்டது என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1975-76-ஆம் ஆண்டு முதல் கெமிஸ்டரி எம்.எஸ்ஸி. வகுப்புகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை என்று நான் விடையளித்திருக்கிறேன்.

இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள்

* *110 வின*—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாம் நிலை தமிழாசிரியர்களை முதல்நிலை தமிழாசிரியர்களாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீல னையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், இந்தத் திட்டத்தின் மூலம் ஆதாயம் பெறும் ஆசிரியர்கள் எவ்வளவு பேர்?

A 113—2